அப்பகுதி மக்களுக்கு அதிகப்படியான பேருந்து வசதியும் இல்லை. ஒரேயொரு பேருந்துதான் இயக்கப்படுகிறது. அந்தப் பேருந்தும் ஏற்காடு கோடை விழா, மாதேஸ்வரன் மலைத் திருவிழா, ஆடிப்பெருக்கு விழா என்று அடிக்கடி திருப்பி அனுப்பப்படுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர். எனவே அப்பகுதி மக்கள் பயன்பெறும்வகையில் கூடமலை, நரிவாடி ஊராட்சி வழியாக போக்குவரத்துக்கு ஏற்ப சாலை அமைத்துக்கொடுத்து, பச்சைமலை ஊராட்சியைச் சுற்றுலாத் தலமாக மாற்றினால், அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் மேம்படும்; வாழ்க்கைத் தரமும் உயரும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சேலம் மாவட்டத்திற்கு உட்பட்ட பச்சைமலை ஊராட்சியைச் சுற்றுலாத் தலமாக அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 313, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

313—

புதிய கட்டடம்

***17613—திரு. ஆர். அருள்செல்வன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 1]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரிலுள்ள அரசு பொது நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்து தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையிலுள்ள கிளை நூலகம், மாதம் ரூ.3,000/- செலுத்தப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 4,950 சதுர அடி காலி மனை மயிலாடுதுறை வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டம் நூலக அலுவலர் அவர்கள் கட்டடம் கட்ட வரைபடம் மற்றும் மதிப்பீட்டு அறிக்கையைப் பொதுப் பணித் துறையிடம் கேட்டுள்ளார். மேற்படி வரைபடம் மற்றும் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், புதிய நூலகக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக அரசு கிளை நூலகம், ஒரு நூலகர், 3 நூலக உதவியாளர்கள்மூலம் சிறப்பாக இயங்கி வருகிறது. இந்நூலகம் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கிட்டத்தட்ட 50,000 நூல்களைக் கொண்ட இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. இந்நூலகம் மயிலாடுதுறை நகராட்சி நூலக வரி வசூல் மூலமாகவும், பொது மக்களுடைய உறுப்பினர் தொகை மூலமாகவும் பல இலட்சம் ரூபாய் அரசுக்குச் செலுத்தியதாகத் தெரிகிறது. ஆகவே, இந்நூலகக் கட்டடத்தைக் கட்டித் தர ஆவன

செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு, நான் முன்பே பதில் அளித்திருக்கிறேன். பொதுப் பணித் துறையிடம் அதற்கான மதிப்பீட்டு அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. அறிக்கை வரப்பெற்றவுடன், விரைவிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை மையப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தின் வடபுறம் சுமார் 6,000 சதுர அடியில் உள்ள மனை பல ஆண்டுகளுக்கு முன்பாகவே நூலகத்திற்குச் சொந்தமான இடமாக ஆவணப் பதிவு செய்யப்பட்டும், உரிமையாக்கப்பட்டும், பூமி பூஜை செய்யப்பட்டும், கட்டடம் எழுந்தபாடில்லை. நூல்களை அடுக்கி வைக்க இடம் இல்லாமல், நூல்கள் மூட்டை மூட்டையாகக் கட்டி வைக்கப்பட்டு, பயன்படாத நிலையில் உள்ளன. எனவே, அரசினால் ஒதுக்கப்பட்ட நூலகத்திற்குப் பதிவுபெற்ற அதே இடத்தில் நூலகக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத்திலேயே கட்டடம் கட்டுவதற்கான பணிகள் தற்போது

வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பொதுப் பணித் துறையிடம் அதற்குத் தேவையான மதிப்பீட்டு அறிக்கைகள் கேட்கப்பட்டுள்ளன. பொதுப் பணித் துறையிலிருந்து அதற்குண்டான மதிப்பீட்டு அறிக்கை உடனடியாக வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு இதனை எடுத்துச்சென்று, வேகமாக அந்தக் கட்டடப் பணிகள் முடித்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 314, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

314—

தரம் உயர்த்துதல்

***37798—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் வட்டம், ஆயக்காரன்புலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படவேண்டும் என்ற நியதியில், அவை தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்தில், ஏற்கெனவே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆயக்காரன்புலம் கூடுதல் ஆரம்ப